**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**FAST TRACK COURT, ERANIEL**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )
**STC.No. 15/2026 P.W. 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. திமிர்த்தியூஸ்** | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. அகஸ்டின் | **Age** | : | 67 |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 02.06.2026.**

**புகார்தாரர் தரப்பு முதல் விசாரணை**

நான் தற்சமயம் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் நான் புகார்தாரர் ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண ஆணை உறுதி ஆவணமாக மின்னணு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகளை எனது தரப்பு சாட்சியமாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நீதிமன்றத்தை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

| **வரிசை எண்** | **விவரம்** | **குறியீடு செய்யப்பட்ட விவரம்** | **ஆட்சேபணை** |
|---|---|---|---|
| 1. | 06.12.2025–ம் தேதியிட்ட TMB வங்கியின் காசோலை எண் 357020 ரூபாய் 3,00,000த்திற்கானது | Ex.P.1. | NA |
| 2. | காசோலையை வங்கியில் தாக்கல் செய்ததற்கான வங்கியின் Deposit செல்லானின் Counterfoil | Ex.P.2 | NA |
| 3. | மேற்படி காசோலை SBI வங்கி, குளச்சல் கிளையிலிருந்து திருப்பப்பட்டதற்கான காரண குறிப்பாணை | Ex.P.3 | NA |
| 4. | 27.01.2026–ம் தேதியிட்ட குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் | Ex.P.4 | NA |

| | | | |
|---|---|---|---|
| 5. | மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு அனுப்பிய அஞ்சலக இரசீது | Ex.P.5 | NA |
| 6. | மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை குற்றம் சுமத்தப்பட்ட நபர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை. | Ex.P.6 | NA |
| 7. | 06.02.2026–ம் தேதியிட்ட குற்றம் சுமத்தப்பட்ட நபர் அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் | Ex.P.7 | NA |

எனவே, எனது புகாரின் அடிப்படையில் நான் கேட்ட பரிகாரத்தை வழங்க வேண்டுமென்று நீதிமன்றத்தை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. நானும் குற்றம் சுமத்தப்பட்ட நபரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால், சரிதான். ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். நாங்கள் இருவரும் மீனவ சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால், சரிதான். எனது ஊரில் மீனவர் கூட்டுறவு சங்கம் உள்ளது என்றால், சரிதான்.

2. மீனவர் கூட்டுறவு சங்கத்தில் நான் இறுதியாக எப்பொழுது தலைவராக இருந்தேன் என்றால், 3 முறை தலைவராக இருந்திருக்கிறேன். ஆனால் எந்த வருடம் என சரியாக ஞாபகமில்லை. மீனவர் கூட்டுறவு சங்கத்தில் எனக்கு போட்டியாக குற்றம் சுமத்தப்பட்ட நபரும் நின்று தோல்வி அடைந்தார் என்றால், சரிதான்.

3. கடலிலிருந்து பிடிக்கும் மீன்களை ஏலத்தில் விற்பனை செய்வார்கள் என்றால், சரிதான். புனித இன்னாசியார் மீன் ஏலம் விடுவோர் சங்கம் என ஒன்று உள்ளது என்றால், சரிதான். எனது தலைமையில் தான் மீன்களை ஏலம் விடுவார்கள் என்றால், இல்லை. என்னை போல் 4–5 பேர் உள்ளார்கள்.

4. மேற்படி புனித இன்னாசியார் மீன் ஏலம் விடுவோர் சங்கத்திற்கு பொறுப்பாளர்கள் உள்ளார்களா என்றால், அதில் மொத்தம் 4 நபர்கள் தான் உள்ளதால் தற்சமயம் மேற்படி சங்கம் செயல்படவில்லை. மேற்படி சங்கத்தில் என்னுடன் சேர்ந்த 4 நபர்கள் தான் மீன்களை ஏலம் விடுவோம் என்றால், சரிதான்.

5. புனித இன்னாசியார் மீன் ஏலம் விடுவோர் சங்கத்தின் முடிவுகளை நாங்கள் 4 பேர் தான் எடுப்போம் என்றால், இல்லை. தற்சமயம் அந்த சங்கம் செயல்பாட்டில்

இல்லை. மீன்களை ஏலம் விடும் பொழுது அதில் 2.5% கமிஷன் எனக்கு வரும் என்றால், சரிதான்.

6. குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னிடமிருந்து மீன்களை ஏலத்திற்கு எடுத்து விற்பனை செய்து வந்தார் என்றால், சரிதான். ஜுன் 2024–லிருந்து குற்றம் சுமத்தப்பட்ட நபரை புனித இன்னாசியார் மீன் ஏலம் விடுவோர் சங்கம், மீன்கள் ஏலம் விடுவதிலிருந்து தடை செய்தோம் என்றால், நாங்கள் 4 பேரும் தனித்தனியாக அவரை தடை செய்தோம்.

7. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு மீன் ஏலம் எடுப்பதற்கு தடை விதித்த நிலையில் அவரால் அப்பொழுதில் இருந்து மீன் வியாபாரம் செய்யவில்லை என்றால், சரிதான். நான் அ.தி.மு.க அரசியல் கட்சியை சேர்ந்தவர் என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபர் காங்கிரஸ் அரசியல் கட்சியை சேர்ந்தவர் என்றால், சரிதான்.

8. குற்றம் சுமத்தப்பட்ட நபர் பஞ்சாயத்து கவுன்சிலர் தேர்தலில் எனக்கு எதிராக போட்டியிட்டு தோல்வி அடைந்தார் என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபர் எனக்கு எதிராக பஞ்சாயத்து கவுன்சிலர் தேர்தலிலும் மீனவர் கூட்டுறவு சங்கத் தேர்தலிலும் போட்டியிட்டதால் எங்களுக்குள் முன்விரோதம் இருந்தது என்றால், சரியல்ல.

9. உண்மையில் எங்களுக்கும் முன்விரோதம் இருந்த காரணத்தினால் குற்றம் சுமத்தப்பட்ட நபரை திட்டமிட்டு மீன் வியாபாரம் செய்யக் கூடாது என தடை விதித்தோம் என்றால், சரியல்ல. நான் தான் என்னுடன் இருக்கும் மற்ற மீன் ஏலம் விடும் நபர்களிடமும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு மீன்கள் கொடுக்கக் கூடாது என கூறினேன் என்றால், இல்லை.

10. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு நான் கைம்மாற்றாக தான் 3 லட்சம் ரூபாய் பணம் கொடுத்தேன் என்று கூறியுள்ளேன் என்றால், சரிதான். நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு கைம்மாற்றாக கொடுத்த பணத்திற்கு வட்டி உண்டா என்றால், இல்லை.

11. பொதுவாக கைம்மாற்றாக பணம் கொடுத்தால் அதனை குறுகிய காலத்திற்கு தான் கொடுப்பார்கள் என்றால், சரிதான். நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு பணம் கொடுத்ததற்கு அத்தாட்சி உள்ளதா என்றால், இவ்வழக்கின் காசோலை தான் அத்தாட்சி.

12. பொதுவாக கைம்மாற்றாக பணம் கொடுப்பவர்கள் காசோலை வாங்குவது வழக்கம் இல்லை என்றாலும், வட்டிக்கு பணம் கொடுப்பவர்கள் தான் காசோலை மற்றும் கடனுறுதி பத்திரம் வாங்குவார்கள் என்றால், அது குறித்து எனக்குத் தெரியாது.

13. என்னிடம் காட்டப்படும் Ex.P1 காசோலையானது நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு கடன் கொடுத்ததற்கு தான் அவர் என்னிடம் கொடுத்தார் என்பதனை காட்ட ஏதேனும் சாட்சிகள் உள்ளதா என்றால், காசோலை தவிர்த்து வேறு சாட்சிகள் இல்லை.

14. Ex.P1 காசோலையானது குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னிடம் எந்த தேதியில் கொடுத்தார் என்றால், காசோலையில் குறிப்பிட்ட தேதியன்று கொடுத்தார். எந்த தேதியில் காசோலை கொடுத்தார் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால், அது குறித்து ஞாபகமில்லை.

15. Ex.P1 காசோலையில் உள்ள விவரங்களை யார் பூர்த்தி செய்துக் கொடுத்தார் என்றால், குற்றம் சுமத்தப்பட்ட நபர் தான் பூர்த்தி செய்துக் கொடுத்தார். எந்த இடத்தில் வைத்து குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னிடம் காசோலை கொடுத்தார் என்றால், எனது வீட்டில் வைத்து கொடுத்தார்.

16. குற்றம் சுமத்தப்பட்ட நபர் காசோலை கொடுத்ததை யார் பார்த்தார்கள் என்றால், எனது மனைவி மற்றும் பிள்ளைகள் பார்த்தார்கள். Ex.P1 காசோலையில் உள்ள விவரங்களை குற்றம் சுமத்தப்பட்ட நபர் பூர்த்தி செய்யவில்லை என்றாலும், அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது என்றாலும், சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபர் 10ம் வகுப்பு வரை படித்துள்ளார்.

17. குற்றம் சுமத்தப்பட்ட நபர் 10-ம் வகுப்பு வரை படித்துள்ளார் என நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. Ex.P1 காசோலையில் கையொப்பத்திற்கும் பூர்த்தி செய்த மற்ற விவரங்களுக்கும் மைகளில் வித்தியாசம் உள்ளது என்றால், அது குறித்து எனக்குத் தெரியாது.

18. Ex.P1 மற்றும் Ex.P2 ஆவணங்களை ஒரே நபர்கள் தான் நிரப்பியுள்ளது போல் உள்ளது என்றால், அது குறித்து எனக்குத் தெரியாது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் 01.06.2025ம் தேதியன்று என்னிடம் கைம்மாற்றாக 3 லட்சம் ரூபாய் கேட்டதாகவும் அதனை 05.06.2025-ம் தேதியன்று நான் கொடுத்ததாகவும் அன்றைய தினமே குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னிடம் பின்தேதியிட்டு காசோலை கொடுத்தார் என்று நான் கூறுவது இவ்வழக்கிற்காக சொல்லப்படும் பொய் என்றால், சரியல்ல.

19. குற்றம் சுமத்தப்பட்ட நபரால் 25.01.2025-ம் தேதியன்று இவ்வழக்கு காசோலை தொலைந்து விட்டதாக அவரது வங்கியில் தெரிவித்து அதனடிப்படையில் Stop Payment கொடுக்கப்பட்டது என்றால், அது குறித்து எனக்குத் தெரியாது.

20. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தொலைத்த காசோலையை வைத்து அவரை பழிவாங்கும் எண்ணத்தோடு இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபர் எனக்கு 3 லட்சம் ரூபாயும் அல்லது வேறு எந்த தொகையையும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால், சரியல்ல.

21. Ex.P1 காசோலையானது ஒரு சட்டப்பூர்வ கடனுக்கு கொடுக்கப்பட்டது இல்லை என்றாலும், அதிலுள்ள விவரங்கள் குற்றம் சுமத்தப்பட்ட நபர் பூர்த்தி செய்யவில்லை என்றாலும், சரியல்ல. இவ்வழக்கு பொய்வழக்கு என்பதால் தள்ளுபடி செய்யத்தக்க வழக்கு என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.